26 ஆக 2013
COMMISSIONER OF COMMERCIAL TAXES
23 AUG 2013

சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "அப்பாவுக்கு கல்யாணம்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (டி) எண்.439

நாள்: 19.08.2013
விஜய, ஆவணி, 3
திருவள்ளுவர் ஆண்டு, 2044

25946

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/18994/2013, நாள் 02.07.2013தேர்வுக்குழு எண்.24/2013–2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு "அப்பாவுக்கு கல்யாணம்" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்ட ஏழு உறுப்பினர்களில் நான்கு உறுப்பினர்கள் இத்திரைப்படம் வரிவிலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. "அப்பாவுக்கு கல்யாணம்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | எஸ். ரசியா, இணை ஆணையர்(செயலாக்கம்) (இடை மாநில புலனாய்வுக் குழு), சென்னை –6. | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளதாலும் இத்திரைப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளதாலும், திரைப்படத்தின் கதை தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டிற்கு உகந்ததாக உள்ளதாலும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாக காட்சிகள் அதிக அளவில் இல்லை என்பதாலும், பிறமொழி சொற்கள் பயன்படுத்தப்படவில்லை என்பதாலும், அரசாணைக்கு உட்பட்டு உள்ளதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க பரிந்துரை செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| 2. | க.அன்னை,<br>துணைச் செயலாளர்,<br>தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை | திரைப்படத்தின் கதையானது தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளதாலும், திரைப்படம் பிறமொழி கலப்பில்லாமல் உள்ளதாலும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசங்கள் அதிக அளவில் இடம் பெறவில்லை என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | முனைவர்,கா.மு. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி<br>இயக்குநர்<br>தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>சென்னை.8 | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளதாலும், திரைப்படத்தில் தமிழர் நாகரீகம், பண்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் காட்சிகள் மற்றும் வன்முறை காட்சிகள் இடம்பெறவில்லை என்பதாலும், திரைப்படத்தில் வசனங்கள் பெருமளவு தமிழில் உள்ளதாலும் இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 4. | சங்கர் கணேஷ்,<br>இசையமைப்பாளர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளது என்றாலும் ‘U’ சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், அரசாங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதல்ல என்பதால் இத்திரைப்படம் வரி விலக்கிற்கு தகுதியில்லா படம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | A.L.ராகவன்,<br>பழம் பெரும் பின்னணிப் பாடகர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளது என்றாலும் ‘U’ சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், இத்திரைப்படத்தில் ஒரு கருத்தும் சொல்லப்படவில்லை என்பதால், இத்திரைப்படம் வரி விலக்கு கொடுக்க தகுதியில்லாத படம் என்பதால் வரி விலக்கு அளிக்க வேண்டாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 6. | M.N. ராஜம்,<br>பழம் பெரும் நடிகை | திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளது என்றாலும், ‘U’ சான்றிதழ் பெற்றுள்ளது என்றாலும், வரி விலக்கு கொடுக்க தகுதியில்லாத படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 7. | ராஜஸ்ரீ,<br>பழம் பெரும் நடிகை | இத்திரைப்படம் அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்படாததால், கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார். |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், ''அப்பாவுக்கு கல்யாணம்'' தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் ''அப்பாவுக்கு கல்யாணம்'' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு)) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/8/2013

பிரிவு அலுவலர்.